**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, ARIYALUR.**

| | | | |
|---|---|---|---|
| Case No: | | SC.No. 134/2025 | |
| Prosecution Witness: | | PW- /LW- | |
| Name: | திரு. இளவரசன் | Taluk: | செந்துறை |
| S/o. | திரு. முத்துராமலிங்கம் | Age: | 40 |
| Occupation: | தலைமைக்காவலர் | Village: | பரணம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the Day **20.07.2026 By Thiru.R.Mohan, Grade I Bench Clerk**

(எதிரி முன்னிலையானார்.)

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது செந்துறை காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு குவாகம் காவல் நிலையத்தில் முதல்நிலைகாவலராக பணியில் இருந்தபோது 10.10.2023 ம் தேதி காலை 11.00 மணியளவில் அரசால் தடைச்செய்யப்பட்ட போதைக்பொருளான ஹான்ஸ் பாக்கெட்டை அசாவீரன் குடிக்காடு கிராமத்தை சேர்ந்த ஆஜர் எதிரியான தேவேந்திரன் என்பவர் தனது கடையில் விற்பதாக தகவல் கிடைத்தது.

உடனே சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் புண்ணியகோடி மற்றும் முதல்நிலை காவலர் 1077 கலைவாணன் ஆகியோருடன் சேர்ந்து நானும் சேர்ந்து சென்று கடையினை நோட்டம் விட்டோம், அப்போது நாங்கள் சாதாரண உடையில் சென்று இருந்தோம். சிறப்பு உதவி ஆய்வாளர் புண்ணியகோடி என்பவர் ஹான்ஸ் பாக்கெட் வாங்கி வந்த ஒருவரை மறித்து எங்கிருந்து ஹான்ஸ் வாங்கி வருகிறாய் என்று விசாரித்தபோது அவர் ஆஜர் எதிரியின் கடையில் இருந்து ஹான்ஸ் வாங்கி வருவதாக சொன்னார். அவர் அவரது கடை மாரியம்மன் கோவிலுக்கு பின்னால் இருப்பதாகவும் சொன்னார். உடனே நாங்கள் சென்று அந்த கடையில் சோதனை போட்டோம். அப்போது அந்த கடையில் 7 பாக்கெட் ஹான்ஸ் இருந்து கைப்பற்றினோம். அதன்பிறகு ஆஜர் எதிரி சோதனைக்கு பின் ஹான்ஸ் பாக்கெட் விற்பனை செய்ததை ஒப்புக்கொண்டார். அதன்பிறகுபொதுமக்கள் யாரும் சாட்சி சொல்ல யாரும் முன்வராததால், எங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றுதல் மகஜரில் ஹான்ஸ் பாக்கெட்டுகளை கைப்பற்றினார். அதில் நானும், 1077 கலைவாணன் என்பவரும் கையொப்பம் செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையதுதான். **அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ–1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதன்பிறகு எதிரியை காவல் நிலையம் அழைத்து வந்து வழக்கு பதிவு செய்தார். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இரகசிய தகவல் எதன் மூலம் வந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். இரகசிய தகவல் வந்ததாக சொல்லப்படும் நேரத்தில் எந்த ஊரில் இருந்தீர்கள் என்றால் குவாகம் காவல் நிலையத்தில் இருந்தேன். எத்தனை மணியில் இருந்து எத்தனை மணி வரை காவல் நிலையத்தில் பணியில் நான் இருந்தேன் என்றால் பணியில் காலை 10.15 மணி வரை இருந்தேன். நான் கைப்பற்றப்பட்ட மகஜர் தயார் செய்த இடத்திற்கு நான் எந்த வாகனத்தில் சென்றேன் என்றால் எனது சொந்த வாகனத்தில் சென்றேன். மேற் சொன்ன இடத்திற்கு என்னுடன் எத்தனை பேர் வந்தார்கள் என்றால் சிறப்பு உதவி ஆய்வாளர் புண்ணியகோடி மற்றும் சகக்காவலர் திரு.கலைவாணன் ஆகியோர் வந்தார்கள். நான் காவல் நிலையத்தில் பின்பற்றப்படும் ரோந்து பற்றி பொது நாட்குறிப்பேட்டில் குறித்து வைப்போம் என்றால் சரிதான். மேற்படி எங்கள் காவல் நிலைய பொதுநாட்குறிப்பேட்டின் அசலையோ, நகலையோ வழக்கில் சான்று ஆவணமாக சேர்த்துள்ளோமா என்றால் இல்லை. நாங்கள் வழக்கமாக கையில் அன்றாடம் பணிபுரியும் பதிவுகளை குறித்து வைக்கும் குறிப்பேடு வைத்திருப்போம் என்றால் சரிதான். மேற்சொன்ன குறிப்பேட்டை இவ்வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. நாங்கள் கைப்பற்றியதாக சொல்லப்படும் பொருட்கள் வெளியில் கிடைக்ககூடிய பொருட்கள் என்றால் அது வெளிப்படையாக கிடைக்காது, மறைமுகமாக கிடைக்கும். நாங்கள் கைப்பற்றப்பட்ட பொருட்களை ஆஜர் எதிரி தயாரிக்கவில்லை என்றால் சரிதான். நாங்கள் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் இடத்திற்கு அருகில் பள்ளிக்கூடம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல,

பள்ளிக்கூடம் உள்ளது. கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் கடை மக்கள் போய் வரும் இடம் என்றால் சரிதான். கடைக்கு அருகே உள்ள மாரியம்மன் கோவிலில் சுமாராக 10, 20 பேர்கள் இருப்பார்கள் என்றால் சரிதான், அருகே பேருந்து நிறுத்தம் உள்ளது. கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் கடைக்கு எத்தனை மணிக்கு சென்றோம் என்றால் 11.00 மணியளவில் சென்றோம். வழக்குமாக இதுபோன்ற வழக்குகளை சுகாதாரத்துறை மற்றும் உணவு பாதுக்காப்பு துறையினர் ஆய்வு செய்து அவர்கள் புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்வதுதான் வழக்கம் என்றால் சரிதான், இரகசிய தகவல் வந்தாலும் வழக்கு பதிவு செய்வதும் வழக்கம். அன்றைய தினம் அசாவீரன்குடிக்காட்டில் உள்ள கடைகளில் எத்தனை வழக்கு போட்டேன் என்றால் 2 வழக்குகள் போட்டோம். நான் 2 வழக்குகளில் கைப்பற்றுதல் மகஜரில் கையொப்பம் செய்தேன் என்றும், அதன் அடிப்படையில் கூறுகிறேன் என்றால் சரிதான். அன்றைய தினம் அசாவீரன்குடிக்காட்டில் மட்டும் 4 வழக்குள் பதிவு செய்துள்ளோம் என்றும், தற்போது வழக்கிற்காக அதற்கு மாறாக 2 வழக்குகள் போட்டுள்ளதாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, நாங்கள் சென்றபோது 2 வழக்குகள் மட்டும்தான் பதிவு செய்தோம். அன்றைய தினம் காவல் நிலைய எல்லைக்குள் உள்ள கிராமத்தில் எத்தனை வழக்குகள் பதிவு செய்துள்ளோம் என்றால் 2 வழக்குகள் மட்டும்தான் ஞாபகம் உள்ளது. மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் இருந்து வந்த குறிப்பின்படி நாங்கள் எதிரி மீது வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றும், புள்ளி விபரக்கணக்கிற்காக எதிரி மீது பொய்யான வழக்கு போட்டுள்ளோம் என்றாலும் சரியல்ல. அதுபோல் நான் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றுப்பட்டதாக சொல்லப்படும் பொருட்கள் பொதுமக்கள் முன்னிலையில் கைப்பற்றி இருப்போம்

என்றும், பொதுமக்களை சாட்சியாக சேர்த்திருப்போம் என்றால் சரியல்ல, பொதுமக்கள் எதிரியின் ஊர்க்காரர் என்பதால் யாரும் சாட்சியாக இருக்க முன்வரவில்லை. நான் சொன்னவாறு சொன்ன இடத்தில், சொன்ன நேரத்தில் பொருட்களை கைப்பற்றவில்லை என்றும், நாங்களாக வழக்கிற்காக தயார் செய்து சான்றுப்பொருட்களை இவ்வழக்கில் சேர்த்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.